**தேசிய இளைஞர் படையணி- 2023**

---------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய இளைஞர் படையணியின் ("படையணி") 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமைகள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று போதியளவிலான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தேசிய இளைஞர் படையணியின் நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிர்வாகத் தரப்பினரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, படையணி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது படையணியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

படையணியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு படையணியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- படையணியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- படையணியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தமது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளில் வாகன பழுது பார்த்தலகளுக்காக செய்யப்பட்ட ரூபா. 1,415,475 ஆன மீண்டெழும் செலவினம் மீளாய்வாண்டில் மூலதனச் | முன்னைய ஆண்டுகளில் வாகன பழுது பார்த்தல் பணிக்காக செய்யப்பட்ட ரூபா. 1,493,975 ஆன செலவினுள் | செலவுகளைக் கணக்கீடு செய்யும் போது சரியாக இனம் கண்டு கணக்கீடு |

| | | | |
|---|---|---|---|
| | செலவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் சொத்துக்கள் ரூபா. 1,195,180 இனாலும் பெறுமானத்தேய்வு ரூபா. 283,095 இனாலும் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | உள்ளடக்கப்பட்டுள்ள மூலதன செலவினை ரூபா. 894,450.00 எனவும் மீண்டும் செலவு ரூபா. 599,550.00 எனவும் வேறுபடுத்தி காட்ட முடியும். ஆதற்கமைய மீண்டெழும் செலவான ரூபா. 599,550.00 தொகைக்கு உரியதாக தேய்மானம், சொத்துக்கள் மற்றும் மீள் மதிப்பீட்டு ஒதுக்கங்களுக்கு உரிய சீராக்கங்களை 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து விலகிய 29 உத்தியோகத்தர்களுக்கு பணிக்கொடையாக செலுத்தப்பட்டிருந்த ரூபா. 3,056,550 பணிக்கொடை ஒதுக்கீட்டுக் கணக்கிலிருந்து கழிக்கப்படாமை மற்றும் ஒரு உத்தியோகத்தருக்கு செலுத்த வேண்டிய பணிக்கொடை ரூபா. 104,500 இனால் மிகை கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தால் செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடை மற்றும் ஆண்டிற்குரிய பற்றாக்குறை ரூபா. 3,161,050 இனால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் ஒழுங்கான முறையில் மீதி இணக்கப்படுத்தலின் மூலம் இவ்வாறான தவறுகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | பணிக்கொடையிைனக் கணக்கிடுதல் மற்றும் கணக்கு வைத்தல் என்பன சரியாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | படையணியினால் பயன்படுத்தப்பட்ட 03 மோட்டார் வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | 03 வாகனங்களின் பதிவு சான்றிதழ்களின் பிரதிகளில் தகவல்கள் தெளிவற்றதாக காணப்பட்டன. அதற்கமைய தெளிவான தகவல்களை பார்த்துக் கொள்வதற்கு ஏற்றவாறான பிரதிகளைப் பெற்றுக்கொண்டு மதிப்பீடு செய்தலை மேற்கொள்ளுவதற்கு வேரஹெர பிரதான அலுவலகத்தில் இருந்து பரிசோதகர் ஒருவரை நியமிக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்களின் உரிமையை கையகப்படுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிர்மாண ஒப்பந்தத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா. 108,558,448 ஆன முற்பண மீதியினுள் 5 ஆண்டுகளுக்கும் அதிகமான மற்றும் 2-3 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாக முன்கொண்டுவரப்படும் முறையே ரூபா. 101,968,773 மற்றும் ரூபா. 6,639,675 ஆன மீதிகளை அறவிடுவதற்கு முறையான மற்றும் பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா. 50,000 ஆன வாடகை முற்பண மீதியையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட முற்பணமாக ரூபா. 101,968,773 ஆன தொகை காட்டப்பட்டிருந்ததுடன், அந்த மீதியில் ரூபா. 50,000 ஆன முற்பணத் தொகையானது இரத்மலானை பிரதேசத்தில் தற்காலிகமாக பேணப்பட்டு வரும் களஞ்சியசாலைக் கட்டடத்திற்கான வாடகைக்காக குறிப்பிட்டுள்ளது.. | பெறவேண்டிய தொகையினைத் தாமதமின்றி தீர்த்துக் கொள்ளுதல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட ரூபா. 24,427,474 ஆன செலுத்த வேண்டிய மீதியினுள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மற்றும் 2-3 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் முன்கொணடுவரப்படும் முறையே ரூபா.2,180,986 மற்றும் ரூபா. 9,297,851 ஆன மீதி வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டமை தவிர குறித்த மீதிகளைத் தீர்த்தல் தொடர்பில் கண்டறிந்து அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டில் பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டு ஒப்பந்தக்காரருக்கு பிடிகாசினை விடுவிப்பதற்கு மற்றும் அரச வருமானத்தில் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய தொகையினைத் தாமதமின்றித் தீர்த்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் 4.2 (ஓ) ஆம் பந்தி | ஆகக் குறைந்தது ஒரு வருடத்தில் மூன்று மாதத்திற்கு ஒரு தடவையேனும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் படையணையினால் 2023 ஆம் ஆண்டுக்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் மூன்று மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்குத் தேவையான அங்கத்தவர்களை நியமித்தல் தற்போது நிறைவடைந்துள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் புதிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அங்கத்தவர்களுடன் குறித்த வகையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்த முடியும் என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | நிறுவனத்தினால் பயன்படுத்தப்படும் அனைத்து வாகனங்களும் நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டியதன் அவசியம் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் படையணிக்குச் சொந்தமான 07 வாகனங்கள் அவ்வாறு பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிவு உரிமையைக் கையகப்படுத்துவதற்கு உரிய MT6 படிவத்தினை அனுப்புதல் மற்றும் அமைச்சிடம் சமர்ப்பித்து இது தொடர்பில் மீண்டும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | படையணிக்குச் சொந்தமான வாகனங்களை நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா. 58,937,916 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா. 5,093,224 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா. 53,844,692 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இப்பின்னடைவிற்கு மொத்த வருமானம் அதிகரிப்பை விட செயற்பாட்டுச் செலவுகள் மற்றும் இளைஞர் அபிவிருத்தி பணிகளின் செலவுகள் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 ஆம் திகதி படையணியின் பயிற்சி மத்திய நிலையங்கள் நிறுவப்பட்டிருந்த 63 காணிகளிடையே 28 காணிகள் மட்டும் படையணியால் கையகப்படுத்தப்பட்டிருந்ததுடன் மீதி 35 காணிகளுக்குமான கையகப்படுத்தும் நடவடிக்கைகள் இதுவரையில் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. | தேசிய இளைஞர் படையணி பயிற்சி மத்திய நிலையம் அமைந்துள்ள 63 கணிகளிடையே 28 காணிகளின் கையகப்படுத்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இன்னும் 05 காணிகளை ஒப்படைப்பதற்கு பிரதேச செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி காணி ஆணையாளர்களினால் பரிந்துரை செய்யப்பட்டு காணி ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மீதி 30 காணிகளின் கையகப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| படையணியின் பிரதான பணியான இளைஞர் மேம்பாடு, தொழில் பயிற்சி மற்றும் தொழில்துறை கல்வியினை வினைத்திறன் மற்றும் பயனுள்ளதாக மேற்கொள்ளுவதற்குத் தேவையான 137 மத்திய நிலைய அதிகாரி மற்றும் ஆலோசகர் பதவிகள் தொடர்ச்சியாக வெற்றிடமாகக் காணப்படுதல் படையணியின் நோக்கத்தினை அடைவதில் மற்றும் பாடநெறிகளின் தரத்தினை பாதுகாத்தல் தொடர்பில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளது. | வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்காகத் தொடர்ச்சியாக செய்யப்பட்ட கோரிக்கைக்கு அமைய இலக்கம் அமப/23/0822/605/012–III கொண்ட மற்றும் 2023 மே 16 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அரச சேவையில் ஆட்சேர்ப்பு செய்யும் நடைமுறைகளை மீளாய்வு செய்யும் பணிகளுக்கு பிரதமரின் செயலாளரின் பங்களிப்புடன் நியமிக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தேசிய இளைஞர் படையணி பயிற்சி மத்திய நிலையங்களுக்கு 18 மத்திய நிலைய அதிகாரி பதவிகள், 48 உடற்பயிற்சி ஆலோசகர் பதவிகள், 14 தகவல் தொழில்நுட்ப ஆலோசகர் பதவிகள் மற்றும் 20 ஆங்கில மொழி ஆலோசகர் பதவிகள் | அத்தியாவசியமான வெற்றிடங்களுக்கு தாமதமின்றி ஆட்சேர்ப்பு செய்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | என்பவற்றுக்கு மட்டும் ஆட்சேர்ப்பு செய்வதற்கு அனுமதி கிடைத்துள்ளது. அதற்கமைய மேலே கூறப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளது என்பதனைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | |

**3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விளையாட்டில் சர்வதேசத்தினை வெற்றிக்கொள்ளுவோம் எனும் வேலைத்திட்டத்தின் கீழ் கரப்பந்து, வலைப்பந்து, ஈட்டி எறிதல் மற்றும் குறிபார்த்து சுடுதல் போன்ற விளையாட்டுகளுக்கு இளைஞர் யுவதிகளை பயிற்றுவித்தல் மற்றும் மேம்படுத்துதல் மூலம் அந்தந்த விளையாட்டுக்களுக்காக திறமைக்கு அமைய அடையாளம் காணப்பட்ட 750 வீர வீராங்கனைகள் கொண்ட குழுவொன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது. இந்தக் குழுவில் இருந்து 2024 ஒலிம்பிக் போட்டியினை பிரதிநிதித்துவப்படுத்தல் மற்றும் வெற்றியினை ஈட்டுதல் மற்றும் 2025 ஆம் ஆண்டில் 150 விளையாட்டு வீர வீராங்கனைகளுக்குத் தொழில்வாய்ப்பு அளிக்கும் எதிர்பார்ப்பில் 2022 ஆம் ஆண்டில் படையணிக்கு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சிடமிருந்து ரூபா. 17.5 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் எதிர்பார்க்கப்பட்ட எந்த ஒரு செயலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் அதற்காக வழங்கப்பட்டிருந்த நிதியில் இருந்து ரூபா. 7.5 மில்லியன் வேறு பணிகளுக்காகப் | தற்போது கரப்பந்து, விலைப்பந்து, ஈட்டி எறிதல் மற்றும் குறி பார்த்து சுடுதல் போன்ற விளையாட்டுத் துறைகளில் இருந்து மாகாண மட்டத்தில் அடையாளம் காணப்பட்ட விளையாட்டு வீர வீராங்கனைகளைக் கொண்ட விளையாட்டுக் குழுக்களுக்கு பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.<br><br>விளையாட்டு அபிவிருத்தி நிதியத்திற்கான ரூபா. 17.5 மில்லியன் மானிய தொகையிலிருந்து மீதி தொகையில் ரூபா. 10 மில்லியன் தொகை 2023 ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதம் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்ட போதிலும், ஆண்டு இறுதியில் அந்த நிதியத்தில் மீதியாக இருந்த தொகையானது ரூபா. 4.7 மில்லியன் தொகையே என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றேன். | நிதி ஏற்பாடுகள் குறித்த பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா. 10 மில்லியன் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | | |

### 3.4 நிதியத்தின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஒவ்வொரு நாளின் இறுதியிலும் படையணியின் வங்கி நடைமுறைக் கணக்கில் ஆகக் குறைந்தது ரூபா. 13,935,401 தொடக்கம் ரூபா. 156,106,568 வரையிலான வீச்சினுள் பண மீதியொன்று இலாபமாக முதலீடு செய்யப்படாது செயல்பாடின்றி பேணப்பட்டிருந்தது. | தேசிய இளைஞர் படையணியின் நடைமுறைக் கணக்கின் வங்கி மீதியானது கூடிய பெறுமதியில் காணப்பட்ட போதிலும் காசேட்டிற்கு அமைய மீதியானது அதனோடு ஒப்பிடும் போது குறைந்த பெறுமதியில் காணப்பட்டது என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.<br><br>தேசிய இளைஞர் படையணிக்கு ஒரு வங்கி கணக்கு பேணப்பட்டு வருவதுடன் 58 மத்திய நிலையங்களுக்கு உரிய அனைத்து செலவுகளுக்கான கொடுப்பனவுகள் அந்த வங்கி கணக்கின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் இலங்கை முழுவதிலும் உள்ள அந்த மத்திய நிலையத்திற்கு உரிய விலைப்பட்டியல்கள் நாளாந்தம் கொடுப்பனவு நடவடிக்கைகளுக்கு தலைமையகத்தில் சமர்ப்பிக்கப்படும். அதற்கு அமைய நாளாந்தம் விலைப்பட்டியல்களைத் தீர்ப்பதற்கு கவனத்தில் கொள்ள தக்களவு தொகையினை மீதியாகப் பேணுதல் அவசியமான விடயமாகும். . | வங்கி மீதியினை ஒழுங்கான முகாமைத்துவத்துடன் பேணுதல் வேண்டும். |

### 3.5 செயலற்ற அல்லது குறைபயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் கருவிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நடப்பு ஆண்டினுள் விளையாட்டு உபகரணப் பயன்பாட்டின் தேவைப்பாடு இல்லாதிருந்த போதிலும் ரூபா. 1,123,850 தொகைக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆண்டினுள் இந்த விளையாட்டு | விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன், அது விளையாட்டு அபிவிருத்தி நிதியத்திற்குரிய செயல்பாட்டு திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டு | மிகை இருப்பினை நிறுத்தி வைக்காது கொள்வனவு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டிருக்காதுடன் ஆண்டு இறுதியில் உள்ள கையிருப்புத் தொகை ரூபா. 1,796,399 ஆக காணப்பட்டது. மேலும், இந்தக் கொள்வனவு வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டில் மற்றும் பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | படையணியினால் ரூபா. 5,514,999 செலவில் நிர்மாணிக்கப்பட்டு இருந்த குறி பார்த்து சுடுதல் பயிற்சி வீச்சு 2023 ஜுலை 06 ஆம் திகதி திறக்கப்பட்டதன் பின்னர் கணக்காய்வு தினமான 2023 செப்டம்பர் 26 ஆம் திகதி வரையிலும் இரு தினங்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இளைஞர் படையணி பயிற்சியாளர்களினால் இந்த குறிபார்த்து சுடுதல் பயிற்சி வீச்சு பயன்படுத்தப்பட்டிருக்காதுடன் பயன்படுத்தப்பட்டு இருந்தது இரு பாடசாலைகளினாலேயே ஆகும். அதற்கு அமைய இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை பூர்த்தி செய்வதற்கு மற்றும் எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றுகை மட்டத்தினை எட்டுவதற்கு தவறி இருந்தது. | திவுலபிட்டிய பயிற்சி மத்திய நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுப் பயிற்சிப் பாடசாலை செயல்பாட்டுடன் பேணிச் செல்வதற்கு அதற்குத் தகுதியுடைய உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அங்கு பயிற்சி நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு அமைய இளைஞர் படையணி மற்றும் மேல் மாகாணத்திற்குரிய பாடசாலைகளில் இருந்து சுமார் 400 பேர் தற்போது வரையில் விளையாட்டில் ஈடுபட்டுள்ளதுடன், தேசிய இளைஞர் படையணியினால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் எட்டப்பட்டு வருகின்றது என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றேன். | வளங்களை உச்சமாக பயன்படுத்துதல் வேண்டும் . |

### 3.6 செயற்திட்டம் அல்லது மூலதன பணியிலான தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கைவிடப்பட்டிருந்த 13 பயிற்சி மத்திய நிலையங்கள் காணப்பட்டன. அதற்காக ரூபா. 852.63 மில்லியன் ஆரம்ப மதிப்பீடொன்றுக்கு அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் நடப்பு ஆண்டின் இறுதி வரையில் ரூபா. 438.12 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டம் 07 ஆண்டுகளுக்கும் அதிக காலம் தொட்டு நிறைவு செய்யப்படாது காணப்பட்ட காரணத்தால் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேற்றினை அடைவதற்கு முடியாதிருந்தது. | இந்த நிர்மாணம் தேசிய இயந்திர உபரண நிறுவனம் (NEMO) மற்றும் தனியார் துறை ஒப்பந்ததாரரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. NEMO நிறுவனம் மூடப்பட்டதன் பின்னர் அதன் பல்வேறு நிர்மாணங்கள் தனியார் துறை ஒப்பந்தக்காரர் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய மத்திய நிலையங்களின் நிர்மாண நடவடிக்கைகள் 2025, 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நிர்மாண செயற்திட்டங்களை விரைவில் பூர்த்தி செய்தல் வேண்டும். |